மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உரை நாளைக்குத் தொடரும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பதின்மூன்றாவது சட்டப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பயன்பெறும்வகையில், புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு (Refresher Course), இன்று (11-4-2007) மாலை 4-00 மணிக்கு, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில் மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 12-4-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 12-4-2007 வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.